# அபாய நிலையில் உள்ள மரங்களை வெட்ட டிபிகேஎல்லுக்கு உத்தரவு






கோலாலம்பூர், மே 15-

தலைநகரில் மீண்டும் மரம் விழுந்ததை அடுத்து உயர் அபாய நிலையில் இருக்கும் மரங்களை வெட்டும் நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளும்படி கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் மரங்களை பராமரிப்பதற்கான திட்டத்தை மேம்படுத்தவும் வயதான அல்லது அபாய நிலையில் உள்ள மரங்கள் தொடர்பான திட்டவரைவை ஜூலை மாதத்திற்குள் தயார்செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்தார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்யவும் சுற்றுச்சூழல் சுபிட்சத்தை பராமரிக்கவும் மரங்கள் நெடுநாட்களுக்கு பாதுகாப்பான நிலையில் இருப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வது உள்ளிட்ட திட்டங்களையும் மாநகர் மன்றம் வரையறுத்து செயல்படுத்த வேண்டும் என அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

திங்கட்கிழமை ஜாலான் பினாங் பகுதியில் மரம் விழுந்த சம்பவத்தில் சில கார்கள் சேதமடைந்தன. குறிப்பாக அந்த வழியே பயணம் மேற்கொண்ட மலாக்கா முதல்வர் டத்தோஸ்ரீ அப்துல் ரவுப் யூசோ காருடன் பயணம் மேற்கொண்ட போலீஸ் வாகனம் சேதமடைந்தது.

இதற்கு முன் மே 7ஆம் தேதி ஜாலான் சுல்தான் இஸ்மாயில் பகுதியில் பெரிய மரம் வேரோடு சாய்ந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.